

சுதந்திரப் போராட்ட தியாகி கடலூர் அஞ்சலை அம்மாள் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு , சமூக நீதி சத்ரியர் பேரவையின் சார்பில் தலைவர் பொன் குமார் நேற்று கடலூரில் அஞ்சலை அம்மாள் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தினார்.இந்த நிகழ்ச்சியில் சமூக நீதி சத்ரியர் பேரவையின் செயலாளர் எஸ் .எம். குமார், அமைப்பு செயலாளர் மதியழகன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஓய்வு பெற்ற வட்டாட்சியர் சண்முகம் ,பண்ருட்டி சுப்பராயன், அஞ்சலை அம்மாள் பேத்தி இளவரசி உள்பட திரளானோர் கலந்து கொண்டனர்.





சென்னை தீவுத்திடலில் மிகச் சிறப்பாக நடைபெற்ற தமிழ்நாடு மீன்வளத் திருவிழா–2025 நிறைவு நாளான நேற்று (1.6.2025) விழாவில் பங்குபெற்று வெற்றி பெற்றவர்களுக்கும் மற்றும் விழாவிற்காக நன்கொடை வழங்கியவர்களுக்கும் நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ்களை மீன்வளம், மீன்வளர்ச்சிக் கழகம் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் ந.சுப்பையன், மீன்வளத்துறை ஆணையர் திருமதி.இரா.கஜலட்சுமி, தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகம் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 102வது நாள்!

## அம்பத்தூர் கிழக்கு பகுதி 84, 84 அ வட்டங்களில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை,ஜூன்.2-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 102 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (01.6.2026) அம்பத்தூர் கிழக்கு பகுதி: 1) வட்டம் 84 அ பஜனை கோயில் பட்டறைவாக்கம், 2) வட்டம் 84 கொரட்டூர் பேருந்து நிலையம், வட்ட செயலாளர் சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்கள் “தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.







இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, பி.கே.மூர்த்தி.எம்.சி, எம். டி.ஆர். நாகராஜ், டி.எஸ். பி.ராஜகோபால் எம்.சி , டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல்.பி.எஃப். மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் என்ற நீலகண்டன் எம்.சி து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி அம்பத்தூர்/கிழக்கு வடக்கு/ தெற்கு/ வட்ட கழக செயலாளர்கள்: மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ.லால் பி.செந்தில்.வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ.சேகர் எம்.சி, நா. நெப்போலியன், ஆர். டீக்கா, ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆ. ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### இன்று மாலை சைதாப்பேட்டையில் நடைபெறுகிறது!

# சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழக செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு

சென்னை, ஜூன் 2

சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெறுகிறது என மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவித்துள்ளார்

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-



சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் இன்று (2-6-2025 திங்கள்கிழமை) மாலை 6 மணியளவில் சைதை பஜார் சாலையில் உள்ள சென்னை தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் எஸ். குணசேகரன் தலைமையில் நடைபெற உள்ளது.

எனவே இக்கூட்டத்தில் தொகுதிக்குட்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், தொகுதிப் பொறுப்பாளர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதி கழகச் செயலாளர்கள், ஒன்றியக் கழகச் செயலாளர்கள், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள், இளைஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், பிற அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுகிறேன்.

பொருள்: கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவித்துள்ளார்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 102 வது பிறந்தநாள் விழா!

## மாவட்ட செயலாளர் மேயர் ரெ.மகேஷ் அறிக்கை !

கன்னியாகுமரி,ஜூன் 2-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ. மகேஷ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



முத்தமிழறிஞர் தமிழின தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வருகிற 2025, ஜூன் 3ம் தேதி, செவ்வாய்க்கிழமை அன்று காலை 9மணியளவில் எனது தலைமையில் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முழுவுருவ வெண்கல சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி சிறப்பாக கொண்டாடப்படஉள்ளது.

மேலும் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் மற்றும் அனைத்து கிளை கழகங்களிலும் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தை வைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொதுமக்கள் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கிட வேண்டும் எனவும், மேலும் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட கழகங்கள், ஊராட்சி கிளை கழகங்கள் மற்றும் கழக சார்பு அணிகளின் சார்பாகவும் ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் நலத்திட்ட உதவிகள், இலவச மருத்துவ முகாம்கள், இரத்ததான முகாம்கள், ஆதரவற்றோர் மற்றும் மாற்றுத்திறனாளி தங்கும் இல்லங்களில் அறுசுவை உணவு வழங்குதல், பள்ளி குழந்தைகளுக்கு நோட்டு புத்தகங்கள், எழுது பொருட்கள் வழங்கியும், மேலும் தலைவர் கலைஞர் அவர்களின் சிறப்புகளை விளக்கும் வகையில் தெருமுனைக் கூட்டம், பொதுக்கூட்டம், பட்டிமன்றம், கலை நிகழ்ச்சி, கட்டுரை போட்டி, பேச்சு போட்டி, இளைஞரணி சார்பாக தெருமுனைக் கூட்டங்களையும், சீரும் சிறப்போடும் எழுச்சியோடும் நடத்தி தலைவர் கலைஞர் அவர்களின் நினைவை கூறும் வகையில் கொண்டாட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே மாவட்டம் முழுவதும் நடைபெறவுள்ள இந்நிகழ்ச்சிகளில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர், வட்ட, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள் மற்றும் பொது மக்கள் என அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள்: கோட்டூர் ஆர்.ராஜ்குமார் தலைமையில்

# பள்ளிப்பட்டு சேவா சமாஜ காப்பக மாணவர்களுக்கு காலை உணவு!

## இரா.துரைராஜ் முன்னிலையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் – மு.மகேஷ்குமார் வழங்குகின்றனர்!

சென்னை, ஜூன் 2-

சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு ஜூன் 3 காலை 7 மணிக்கு பகுதிசெயலாளர் இரா.துரைராஜ் எம்.சி. முன்னிலையில் பகுதி துணை செயலாளர் கோட்டூர் ஆர்.ராஜ்குமார் தலைமையில், வட்ட செயலாளர்கள் கோ.சண்முகம், கோட்டூர்புரம் க.மணி, இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் எஸ். பிரகாஷ், மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.ஜே.சலாம், எஸ். ரவி, கே.எம்.எஸ்.கணேசன், என். பாபு, எம்.மகேஷ்லாரன்ஸ் ஆகியோரது வரவேற்பில் பள்ளிப்பட்டு சேவா சமாஜம் பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு காலை சிற்றுண்டியினை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்

இந்நிகழ்ச்சியில் துணை மேயர் சைதை மு.மகேஷ்குமார், மாவட்ட கழகநிர்வாகிகள், பொதுகுழுஉறுப்பினர்கள், பகுகி கழக நிர்வாகிகள், வட்ட கழகநிர்வாகிகள், அணிகளின் மாவட்ட, பகுதி ,வட்டஅமைப்பாளர்கள், வட்ட செயற்குழு உறுப்பினர்கள், அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளனர்.

### சுதந்திரப் போராட்ட வீராங்கனை - கடலூர் அஞ்சலை அம்மாள் பிறந்தநாள்!

## சிலைக்கு - பொன்குமார் மாலை அணிவித்து மரியாதை

கடலூர், ஜூன் 2-

காந்தியடிகளால் தென்னாட்டு ஜான்சிராணி என பாராட்டப் பெற்ற சுதந்திரப் போராட்ட வீராங்கனை கடலூர் அஞ்சலை அம்மாள் பிறந்த நாளை ஒட்டி நாளை ஜீன் 1 ஆம் நாள் காலை 10 மணி அளவில் கடலூரில் உள்ள அவரது சிலைக்கு வாரியத் தலைவர் பொன்குமார் அவர்கள் மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தினார். இதற்கான ஏற்பாடுகளை சமூக நீதி சத்திரியர் பேரவை ஏற்பாடு செய்துள்ளது.

தியாகி அஞ்சலை அம்மாள் இந்திய நாட்டின் விடுதலைக்காக தன் வாழ்க்கையை முழுமையாக ஒப்படைத்துக் கொண்ட மகத்தான தியாகி. அவர், கடலூர் முதுநகரில், தற்போது சுண்ணாம்புக்கார தெரு என்று அழைக்கப்படும் தெருவில் கடந்த 1890ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் தேதியில் பிறந்தார்.

இளம் வயதிலேயே படிக்கும் பழக்கம் கொண்டிருந்த அஞ்சலை அம்மாள் இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஆர்வம் கொண்டவராக திகழ்ந்தார். அப்போது புதுச்சேரியில் தங்கியிருந்த பாரதியார் கடலூருக்கு இரண்டு முறை வந்து அஞ்சலை அம்மாளை சந்தித்து அவருடைய தேசப்பற்றை ஊக்குவித்தார். சென்னையில் அப்போது நீல் என்ற ஆங்கிலேய கொடுங்கோலனுக்கு வைக்கப்பட்டு இருந்த சிலையை அகற்றக் கோரும் போராட்டத்தில் அஞ்சலை அம்மாள் தனது 11 வயது மகள் அம்மாப் பெண்ணுடன் சேர்ந்து 1927 ஆம் ஆண்டு ஈடுப்பட்டார். இதற்காக அவர்கள் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டனர்.

மறுநாள் கணவர் முருகப்படையாட்சியும் கைது செய்யப்பட்டார். ஒரே நேரத்தில் மூன்று பேரும் வெவ்வேறு சிறையில் காவலில் வைக்கப்பட்டிருந்தனர். பின்னர் ஆறுமாத கர்பிணியாக இருந்த போது உப்புக் காய்ச்சும் போராட்டத்தில் ஈடுப்பட்டதால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். பிறகு பேரோலில் வெளியில் வந்து குழந்தையைப் பெற்றுக் கொண்டு மீண்டும் சிறைக்குச் சென்றார். அந்தக் குழந்தைக்கு ஜெயில்வீரன் என்று பெயரிட்டார்.

கடந்த 1937 மற்றும் 1946 ஆகிய இரண்டு சட்டப் பேரவைத் தேர்தல்களிலும் காங்கிரஸ் கட்சி சார்பில் கடலூர்தொகுதியில்போட்டியிட்டு வெற்றிப் பெற்றவர் அஞ்சலை அம்மாள் அவர்கள் என்று குறிப்பிடத்தக்கது.





திருவள்ளூர் மேற்கு மாவட்டம் கடம்பத்தூர் ஒன்றிய அரசினர் மேல்நிலைப் பள்ளியில் கோடைகால இலவச விளையாட்டு போட்டிகள் நடைபெற்று வரும் நிலையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் , மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ ஆகியோர் ஆலோசனைப்படி திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக துணைச் செயலாளர் வி.சி.ஆர். குமரன் தமது சொந்த நிதியிலிருந்து பயிற்சியில் கலந்து கொண்ட 102 மாணவ மாணவிகளுக்கு சீருடை கைப்பந்து விளையாட்டு உபகரணங்கள் மற்றும் முகாமில் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு கோப்பை சான்றிதழ்களை வழங்கி பாராட்டினர். இதில் பயிற்சியாளர்கள் போட்டியாளர்கள் பலர் உள்ளனர்.

### தமிழ்நாடு மாநகராட்சிகள்

# பொது ஊழியர்கள் முன்னேற்ற சங்க ஆலோசனைக் கூட்டம்!

## சங்கப் பொதுச் செயலாளர் ஜி.சத்தியகுமார் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 2 -

தமிழ்நாடு அனைத்து மாநகராட்சிகள் பொது ஊழியர்கள் முன்னேற்ற சங்க பொதுச்செயலாளர் ஜி.சத்தியகுமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு அனைத்து மாநகராட்சி பொது ஊழியர்கள் முன்னேற்றச் சங்க ஆலோசனைக் கூட்டம் இன்று (02.06.2025 திங்கள் கிழமை) மாலை 3.00 மணியளவில் சென்னை மாநகராட்சி பொது ஊழியர்கள் முன்னேற்ற சங்கம்

தொ.மு.ச. சங்க அலுவலகத்தில் மாநில தலைவர் வே. பாபு மாணிக்கராஜ் தலைமையில் மாநில பொருளாளர் டி.கன்னியப்பன் முன்னிலையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தலைமை சங்க நிர்வாகிகள் மற்றும் மண்டலம், கோட்டம் நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : முத்தமிழ்றிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா.

இவ்வாறு ஜி. சத்தியகுமார் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### தலைமை: சீ.கிருஷ்ணமூர்த்தி! முன்னிலை: நந்தனம் கி.மதி எம்.சி.!

# 121 ‘அ’ வட்ட கழகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள்: காலை உணவு!

## மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

சென்னை,ஜூன்.2-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின், 102 பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு, சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி, 121அ வட்ட திமு கழகத்தின் சார்பில், நாளை 3.6.2025 செவ்வாய்க்கிழமை காலை 10 மணி அளவில் லாயிட்ஸ் சாலை 121அ வட்ட கழக அலுவகத்திலும், நடேசன் சாலையிலும்

வட்ட செயலாளர் சீ.கிருஷ்ணமூர்த்தி தலைமையில், மயிலை மேற்கு பகுதி செயலாளர் மற்றும் 121வது வார்டு மாமன்ற உறுப்பினர் நந்தனம் கி மதி எம்.சி, முன்னிலையில், மாவட்ட செயலாளர் மற்றும் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., கழக கொடி ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்புகளையும், காலை சிற்றுண்டிகளையும் வழங்குகிறார்.

121 அ வட்ட திமு கழகத்தின் சார்பில், ஏற்பாடு செய்து இருக்கும் இந்நிகழ்ச்சியில், மயிலை மேற்கு பகுதி கழக நிர்வாகிகள், 121 அ வட்ட கழகத்திற்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், BLA2 / BLC நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் திரளாக பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.